# தமிழ் இலக்கியங்களில் காலந்தோறும் மானுட விழுமியங்களும் கலைக்கூறுகளும்

தொகுதி – II


பதிப்பாசிரியர்கள்

முனைவர் க. முருகேசன்

முனைவர் சு. குமரன்

முனைவர் சி. மகாலட்சுமி




# தமிழ் இலக்கியங்களில் காலந்தோறும் மானுட விழுமியங்களும் கலைக்கூறுகளும்

**(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)**


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | **முனைவர் க. முருகேசன்**<br>**முனைவர் சு. குமரன்**<br>**முனைவர் சி. மகாலட்சுமி** |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | டிசம்பர், 2015 |
| வெளியீடு | : | **தமிழ்த்துறை**<br>**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**<br>கோயம்புத்தூர் – 641029. |
| கணினி | : | பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் – 29. |
| அச்சாக்கம் | : | பிரடாக் பிரிண்ட்,<br>476/1 பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் – 29.<br>அலைபேசி : 98432 73994, 91505 91017 |
| பக்கங்கள் | : | X + 521 - 1136 |
| விலை | : | உரூ. 350/- |

**ISBN : 978 - 93 - 80800 - 59 - 2**


# International Conference on Elements of Arts and Human Values in Tamil Literature


| | | |
|---|---|---|
| Editor's | : | **Dr. K. Murugesan. Dr. S. Kumaran**<br>**Dr. C. Mahalakshmi** |
| Copyright's | : | Editors |
| First Edition | : | December, 2015 |
| Published | : | **Department of Tamil**<br>**Kongunadu Arts and Science College**<br>Coimbatore - 641 029. |
| Computer | : | **Prdag Print**, Coimbatore - 29. |
| Printing at | : | **Prdag Print**<br>476/1, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 91505 91017 |
| Pages | : | X + 521 - 1136 |
| Prize | : | **Rs. 350/-** |

207. ப. காந்தி — 976
சங்க இலக்கிய முல்லைத் திணையுள் மானுட பண்பாட்டு விழுமியங்கள்

208. முனைவர் இரா. வசந்தமாலை — 981
பஞ்சமரபில் யாழ்

209. முனைவர் ம. மணிமேகலை — 986
மானுட விழுமியம் பேணும்

210. செ. வெள்ளத்துரை — 991
எட்டுத்தொகை நூல்களில் மானுட விழுமியங்கள் விருந்தோம்பல்

211. சி. தமயந்தி — 996
சொப்பனபூமியில் நாவல் போற்றும் பண்பாட்டு விழுமியங்கள்

212. சு. அனிதா — 1002
ஏறுதழுவுதலும் விழுமியமும்

213. முனைவர் தி. பெரியசாமி — 1006
சங்ககாலப் போரின் மாண்பு

214. ஜெ. கலாதேவி — 1010
சிறுதெய்வவழிபாட்டில் பொன்னியம்மன்

215. ம. பத்மாவதி — 1014
வள்ளுவம் காட்டும் நட்பு

216. முனைவர் இரா. மனோகரன் — 1019
தமிழர் பண்பாட்டில் ஈமச்சின்னங்கள்

217. முனைவர் பெ. சாந்தி — 1025
இலக்கியம் காட்டும் மனித விழுமியங்கள்

218. செ. கவிதா — 1030
கம்பராமாயண காப்பியத்தில் சபரியின் மானுட விழுமியங்கள்

219. ஆ. நித்யா — 1035
சுஜாதாவின் குறும்புதினங்களில் பொருந்தாமணம்

220. சு. மலர்விழி — 1040
கவிஞர் மகுடேசுவரனின் எழில்நலம் கவிதைத் தொகுப்பில் மானுட விழுமியங்கள்

221. முனைவர் மு. நாகராஜன் — 1045
பாரியின் கைவண்மையும் நட்பும்

222. முனைவர் பா. சிவநேசன் — 1050
விழுமியம் - சொல்லாராய்ச்சி

# 221. பாரியின் கைவண்மையும் நட்பும்

**முனைவர் மு. நாகராஜன்**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி*
*கோவை - 641 029.*

தமிழ் கூறும் நல்லுலகிலேல் பாரி என்ற பெயரே தமிழனை தலை நிமிர வைக்கும் தாரகச் சொல்லாகும் என்பதில் ஐயமில்லை. பாரி பறம்பு மலையினை ஆட்சி செய்த குறுநில மன்னன். கடைச்சங்க காலத்தைச் சேர்ந்த வள்ளல். வேளிர் குலத்தைச் சார்ந்த அவனை அனைவரும் வேள் பாரி என்றே அழைத்தனர். பாரி பறம்பு மலையினையும் அதனைச் சேர்ந்த முந்நூறு ஊர்களையும் தனது ஆளுகைக்கு உட்படுத்திச் சிறந்ததொரு ஆட்சியை வழங்கி சரித்திரத்தில் இடம் பெற்றவன். பறம்புமலை இக்காலத்தில் பிறான்மலை என்று வழங்கப்படுகிறது. பறம்பானது அன்றைய பாண்டிய அரசின் எல்லையை ஒட்டி அமைந்திருந்தது. கொடுங்குன்றம் என்பது பறம்பின் மற்றொரு பெயராகும். இம்மலை மேருமலையின் ஒரு பகுதி என்னும் புராணக்கதையும் உண்டு. பிறான்மலை சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் கிருங்காக்கோட்டை என்னும் ஊரின் அருகில் உள்ளது. சிறிய பகுதிகளை ஆட்சி செய்த போதிலும் அவனுடைய புகழ் மூவேந்தர்களைவிட உயர்வாக இருந்தமையை தமிழ்ச்சான்றோர் அனைவரும் ஒப்புக்கொள்வர். கேட்பவர்களுக்கு இல்லை என்று கூறாது வழங்கக்கூடியவன் பாரி. கடையேழு வள்ளல்களில் ஒருவராக சங்க இலக்கியத்திலே பதிவாக்கப்பட்டுள்ளவன்.

*"நல்லவுந் தீயவு மல்ல குவியிணர்ப்*
*புல்லிலை யெருக்க மாயினு முடையவை*
*கடவுள் பேணே மென்னா வாங்கு*
*மடவர் மெல்லியர் செல்லினும்*
*கடவன் பாரி கைவண்மையே"* *(புறம்.106)*

மலரில் நல்லது, தீயது என்பதெல்லாம் நம்மைப் போல், இறைவனுக்கு இல்லை. அதாவது எவரும் விரும்பாத, குவிந்த மலர்களும், புல்லிய இலைகளையும் கொண்ட எருக்கம் பூவானாலும் அதனை உள்ளன்போடு அணிவித்தால் கடவுள் வேண்டாம் என்று மறுக்காமல் ஏற்பார். அதைப்போன்று ஏதும் அறியா மடவோர், புல்லிய குணமுள்ளவர் வறுமையுற்றார் என எவர் வரினும் பாரி வழங்குவான் என்பதால் அவனது கொடைத்தன்மை பாடலில் பதிவாக்கப்பட்டுள்ளமையை உணர முடிகிறது.

பாரி ஓரறிவு உயிரான ஒரு முல்லைக்கொடிக்குத் தன் தேரைக் கொடுத்தான். இது நடந்தது ஒரு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு